***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.316/2022 – P.W. 1 (LW-1)***

| | |
|---|---|
| *Name* | சதீஷ்குமார் |
| *Father/Husband's Name* | தேவதாஸ் |
| *Village* | பாலையூர் |
| *Taluk* | முத்துப்பேட்டை |
| *Religion* | |
| *Age* | 42 |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து தற்போது ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது ஊர்க்காரர் ஆவார். கடந்த 27.01.2022 ம் தேதியன்று இரவு 8 மணியளவில் பாலையூர் ஓயின்ஷாப் அருகிலுள்ள புளியமரத்தடியில் நானும், இளையராஜாவும் மது அருந்திக்கொண்டிருந்தோம். எனக்கு இளையராஜா கொடுக்க வேண்டிய பணத்தை நான் கேட்டேன். இளையராஜா தான் பணம் கொடுத்து விட்டதாக சொன்னார். அதற்கு நான் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னேன். இளையராஜா தேவடியா மகனே, குச்சிக்காரி மகனே என்று திட்டி பீர் பாட்டிலால் எனது தலையில் அடித்துவிட்டார். அதில் எனது தலையில் ரத்தம் வந்துவிட்டது. நான் சத்தம் போடவே நாகராஜ் மகன் பிரபாகரன் என்பவர் அங்கு வந்து அவரது இருசக்கர வாகனத்தில் என்னை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். அங்குள்ள மருத்துவர் பரிசோதித்து என்னை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். நான் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சுமார் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தேன். எனக்கு தையல் போட்டார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது 3 நாட்கள் கழித்து தான் போலிசாரிடம் புகார் வாக்குமூலம்

கொடுத்தேன். அதை போலிசார் எழுதிக்கொண்டு என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் கையொப்பம் செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் என்னால் மேற்படி மருத்துவமனையில் கொடுக்கப்பட்டது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தபோது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை போலிசாரிடம் சொன்னேன். 3 நாட்கள் கழித்து பெருகவாழ்ந்தான் போலிசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் திருவாரூர் அரசு மருத்துவமனையில் வாங்கினார்கள். சம்பவத்தின் போது காயமடைந்தற்கு பின்னிட்டு எப்போது சுயநினைவு வந்ததது என்றால் 3 நாட்கள் கழித்து வந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நானும் எதிரியும் மதுபோதையில் இருந்தோம் என்றால் சரிதான்.

2. பொது இடத்தில் மது குடித்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் ஆற்றுகரை ஓரமாகத்தான் மது குடித்தோம். அவ்வாறு குடிப்பது தவறு என்றால் சரிதான். எதிரி சம்பவத்தின்போது எனக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று தான் சொல்லியுள்ளேனா தவிர உண்மையில் பணம் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி எனக்கு பணம் எதுவும் கொடுக்கவேண்டியதில்லை என்றாலும், உண்மையில் எதிரி பணம் கொடுக்க வேண்டியிருந்தால் தொகை குறித்து குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

3. சம்பவத்தின்போது நான் எதிரியை அடிக்க முற்பட்டபோது தவறி கீழே விழுந்ததில் கீழே கிடந்த பாட்டில் குத்தி தான் எனக்கு காயம் என்றால் சரியல்ல. எனக்கு காயம் ஏற்பட்டதால் எதிரியிடமிருந்து பணம்வாங்க வேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.